தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி.

முன்னிலை : திருமதி.J.கிறிஸ்டல் பபிதா, எம்.எஸ்.சி., எம்.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தென்காசி.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ஆம் நாள் செவ்வாய் கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 432/ 2018

C.N.R.No.TNTS02-000707-2018

அரசுக்காக :-
காவல் ஆய்வாளர்,
கடையநல்லூர் காவல் நிலையம்,
கு.எண் : 154 / 2016 . . . குற்றமுறையிடுபவர்

/ எதிராக /

முகமது அபுபக்கர் சித்திக்
த.பெ. செய்யது சுலைமான்
சந்தை தெரு,
பேட்டை, கடையநல்லூர்.

. . . எதிரி

இந்த வழக்கானது 26.09.2018 அன்று தென்காசி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.432/2018 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தென்காசி, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, 19.02.2026 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கு **24.07.2026** அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.R. சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.H. அகமது அப்துல் காதர் அவர்கள் ஆஜராகியும், வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சியங்கள்

மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்து இன்று (11.08.2026) இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :—</u>**

ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக கடந்த 13.05.2016 ம் தேதி அன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் மதினா நகரில் புகார்தாரருக்கு சொந்தமான இடத்தில் கட்டிட வேலை நடந்து கொண்டிருக்கும் போது எதிரி மேற்படி இடத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து புகார்தாரர் கட்டி இருந்த கல்லை பிடுங்கி எறிந்தும் புகார்தாரர் தண்ணீர் பிடிப்பதற்காக வைத்திருந்த ஓசை உடைத்து எறிந்தும் அதை தட்டிக் கேட்ட 1, 2 சாட்சிகளை பார்த்து "போங்கடா கூதி மகன்களா என்னிடம் எதுவும் பேசினால் உங்களுக்கு இதே இடத்தில் சமாதி கட்டிவிடுவேன்" என குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், எனவே எதிரி இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) —ன் குற்றங்கள் புரிந்துள்ளதாக கடையநல்லூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. அழைப்பாணையின்பேரில் ஆஜரான எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.விமு.ச.207 பிரிவின் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. இரு தரப்பு வாதுரைகளையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்து எதிரி குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குற்றங்கள் புரிந்திருக்கக்கூடும் என்று கருதுவதற்கு போதுமான ஆதாரங்கள் வழக்கில் இருந்தமையால் எதிரி மீது இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) —ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் விளக்கிக்கூறி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்த காரணத்தால் அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

4. இந்த வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அசா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

5) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:–

சுமார் 9 வருடங்களுக்கு முன்பு மதியம் 01.00– 02.00 மணியளவில் அசா–1 அபுபக்கர் சித்திக் என்பவரின் ஊருக்கு பக்கத்தில் உள்ள வயலில் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்துள்ளது. அப்போது எதிரி அங்கு வந்து கல்லு, செங்கல் சுவரை கம்பை வைத்து இடித்து சேதப்படுத்தியுள்ளார். அசா–1 காவல் நிலையம் சென்று புகார் மனு அசாஆ–1 கொடுத்துள்ளார்.

6. அசா–6 உதவி ஆய்வாளர் கனிராஜ் என்பவர் கடந்த 13.05.2016 ம் தேதி 21.30 மணிக்கு அசா–1 அபுபக்கர் சித்திக் என்பவர் கொடுத்த புகார் மனு அசாஆ–1 ஐ பெற்று அதனடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அசாஆ–3 பதிவு செய்துள்ளார். 14.05.2016 ம் தேதி காலை 09.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் முகமது இப்ராஹிம் மற்றும் அசா–5 முகமது காலித் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அசாஆ–2 மற்றும் வரைபடம் அசாஆ–4 தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இத்துடன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

7. எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(ஆ) பிரிவின் படி எதிரிக்கு பாதகமாக உள்ள, சாட்சிகளின் சாட்சியங்களை எடுத்துக் கூறி வினவிய போது எதிரி 'பொய் சாட்சி' என்றும் தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் 'இல்லை' என்றும் கூறியுள்ளார்.

8. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) –ன் படியான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதாகும்.

9. **<u>தீர்வு:–</u>**

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரி மேற்படி இடத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து புகார்தாரர் கட்டி இருந்த கல்லை பிடுங்கி எறிந்தும் புகார்தாரர் தண்ணீர் பிடிப்பதற்காக வைத்திருந்த ஓசை உடைத்து எறிந்தும் அதை தட்டிக் கேட்ட 1, 2 சாட்சிகளை பார்த்து "போங்கடா கூதி மகன்களா என்னிடம் எதுவும் பேசினால் உங்களுக்கு இதே இடத்தில் சமாதி கட்டிவிடுவேன்" என அவதூறான வார்த்தைகள் பேசி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக உள்ள இந்த வழக்கானது அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழுங்கவேண்டும் எனவும் கூறியுள்ளார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை எனவும், எதிரி இந்த வழக்கில் ஈடுபட்டதாக அரசுத்தரப்பில் தனிநபர் சாட்சியங்கள் எதுவுமில்லை எனவும், அரசுதரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

11. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில், எதிரி மேற்படி இடத்திற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்து புகார்தாரர் கட்டி இருந்த கல்லை பிடுங்கி எறிந்தும் புகார்தாரர் தண்ணீர் பிடிப்பதற்காக வைத்திருந்த ஓசை உடைத்து எறிந்தும் அதை தட்டிக் கேட்ட 1, 2 சாட்சிகளை பார்த்து "போங்கடா கூதி மகன்களா என்னிடம் எதுவும் பேசினால்

உங்களுக்கு இதே இடத்தில் சமாதி கட்டிவிடுவேன்" என அவதூறாக பேசி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்பட்டு எதிரி மீது இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) – ன் படியான குற்றச்சாட்டுகள் வனையப்பட்டுள்ளது.

12. அசா–1 அபுபக்கர் சித்திக் என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் சம்பவ நாள் தன்னுடைய இடத்தில் கட்டட வேலை நடந்து கொண்டிருந்த போது எதிரி அங்கு வந்து கல் செங்கல் சுவரை கம்பை வைத்து இடித்து சேதப்படுத்தினார் எனவும் உடைத்துவிட்டு போய்விட்டார் எனவும் பின்னர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் மனு அசாஆ–1 கொடுத்ததாகவும் கூறியுள்ளார். அசா–1 ன் மகன் அசா–2 ஷேக்முகம்மது என்பவர் தன்னுடைய சாட்சியத்தில் எதிரி தன்னுடைய வீட்டில் கட்டுமான வேலை நடந்து கொண்டிருந்த போது அத்துமீறி உள்ளே நுழைந்து கல் கட்டிடத்தை இடித்து போட்டார் "எனவும் ஒஸ் பைப்பை பிய்த்து போட்டார் எனவும் உங்களை சமாதியாக்கி விடுவேன்" என்றும் "அறுதக்கூதி மவன்" எனவும் தகாத வார்த்தையால் தன்னையும் தன் அப்பாவையும் பேசினார் எனவும் அதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு தாங்கள் ஆளானோம் என்றும் கூறியுள்ளார்.

13. எதிரிதரப்பில் சம்பவம் இடம் அசா–1 க்கு பாத்தியப்பட்ட இடம் இல்லை என கூறப்பட்டுள்ளது. சம்பவ இடம் அசா–1 க்கு சொந்தமானது என்று காண்பிக்க எந்த ஆவணங்களும் புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்படவில்லை. அரசுத்தரப்பில் ஒஸ் பைப்பு சேதம் அடைந்ததாக கூறி இருந்தாலும் எதிரி ஒஸ் பைப்பை சேதப்படுத்தியதாக அசா–1 சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரியால் சேதப்படுத்தப்பட்ட செங்கல் மற்றும் ஒஸ் பைப் எதுவும் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் சேதாரத்தை காட்டும் புகைப்படங்கள் எதுவும் அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

14. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் எதிரி மிரட்டியதாகவோ, அவதூறான வார்த்தைகள் பேசியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை.

சம்பவத்தை குறித்து அசா–1, அசா–2 ஆகியோரின் சாட்சியங்களில் மிக்க முரண்பாடுகள் உள்ளது.

15. எதிரிதரப்பில் எதிரிக்கும் அசா–1 க்கும் இடையில் ஏற்கனவே உரிமையியல் வழக்கு உள்ளது எனவும் அந்த விரோதினால் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு கொடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. அசா–1 தன்னுடைய சாட்சியத்தில் ஏற்கனவே அசல் வழக்கு எண் 176/2016 என ஒரு வழக்கு எதிரி மீது தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். அரசுத்தரப்பில் சம்பவம் குறித்து முரண்பட்ட சாட்சியங்கள் உள்ள நிலையிலும் சம்பவம் இடம் அசா–1 க்கு உரிமைப்பட்டது என்று அரசுத்தரப்பில் எந்த ஆவணங்களும் முன்னிலைப்படுத்தப்படாத நிலையிலும் எதிரி சேதப்படுத்தியதாக கூறப்பட்ட பொருட்கள் புலன் விசாரணை அதிகாரியால் கைப்பற்றப்படாத நிலையும் இந்த சம்பவம் குறித்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

16. மேலே கூறிய விரிவான விளக்கங்களில் இருந்து, அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேத்திற்கப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கலாம் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2) –ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரி குற்றவாளி அல்ல என்றும் முடிவு செய்து எதிரியை இதச பிரிவுகள் 447, 427, 294(பி), 506(2)–ன் படியான குற்றங்களிலிருந்து குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 248(i)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்துள்ள நிலையில், மேல் முறையீட்டு காலத்திற்கு பின் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திட உத்தரவிடப்படுகிறது.

18. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் தாக்கல் இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 11 ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.08.12 14:48:55 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

அரசு தரப்பு சாட்சிகள் : –

| அரசுத்தரப்பு சாட்சி எண் | சாட்சியின் பெயர் | விளக்கம் |
|---|---|---|
| 1 | திரு. அபுபக்கர் சித்திக் | புகார்தாரர் |
| 2 | திரு. ஷேக்முகம்மது | கண்ணுற்ற சாட்சி |
| 3 | திரு. செய்யது மசூது | கண்ணுற்ற சாட்சி |
| 4 | திரு. இசக்கிமுத்து | கண்ணுற்ற சாட்சி |
| 5 | திரு. முகமது காலிப் | மாதிரி வரைபடம், பார்வை மகஜர் சாட்சி |
| 6 | திரு. கனிராஜ் (உதவி ஆய்வாளர்) | புலன் விசாரணை அதிகாரி |

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| அரசுத்தரப்பு சான்றாவணம் எண் | சான்றாவணத்தின் விளக்கம் | நிரூபித்தவர் / சான்றளித்தவர் |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | பார்வை மகஜர் | அ.சா.5 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |
| 4. | மாதிரி வரைபடம் | அ.சா.6 |

அரசு தரப்பு சான்று பொருட்கள்:– இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : – இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள்கள்: – இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.08.12 14:49:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
தென்காசி.

<u>பின் குறிப்பு:–</u>

- ✓ **எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்து வந்தார்.**
- ✓ **சாட்சிகள் மூன்று நாட்களுக்கு மேல்விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.**
- ✓ **காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.**